4. அரசினர் தீர்மானங்கள்

(அ) கூட்டாய்வுக் குழு—வெற்றிடத்தை நிரப்புதல்

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" சட்டமன்ற மேலவை உறுப்பினரும், சுற்றுப்புற நலத் துறை அமைச்சருமான மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா அவர்கள், தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப் படுவதை தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1982) மீதான கூட்டாய்வுக் குழுவின் உறுப்பினர் பதவியி லிருந்து விலகிக் கொண்டதால் ஏற்பட்டுள்ள வெற்றி டத்தை நிரப்பும் பொருட்டு, அவருக்குப் பதிலாக வேறு ஒரு சட்ட மன்ற மேலவை உறுப்பினர் அக் குழுவில் பணியாற்ற நியமிக்கும்படி தமிழ்நாடு சட்ட மன்ற மேலவைக்கு இப்பேரவை பரிந்துரை செய்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்றது.

2. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

(ஆ) நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) திருத்த (திருத்த) சட்ட முன்வடிவு 1983 (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ் நாடு 1983-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) திருத்த (திருத்த) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 55/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(ஆய்வு செய்தல்)

(அ) நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) திருத்த (திருத்த) சட்டமுனவடிரு, 1983

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்தல்) திருத்த (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1983) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் "

** 1983-ம் ஆண்டு நவம்பர் 9-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.